மா.வெங்கடேசன், M.A., M.PHIL., B.ED., முதுகலை ஆசிரியர் ( வரலாறு )
அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, அயப்பாக்கம், சென்னை - 77.

HSE First year Examination, march - 2024. History Total Marks : 90

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் 20 x 1 = 20

| A | B |
|---|---|
| 1. ஈ. பாரசீகம். | 1. ஈ. இரண்டாம் தேவராயர். |
| 2. ஆ. பெருநற்கிள்ளி. | 2. ஈ. இராமபாலர் இராமசரிதத்தை இயற்றினார். |
| 3. அ. புதிய தலைப்பாகை. | 3. ஈ. முதலாம் இராஜேந்திரன். |
| 4. ஈ. வில்லியம் பெண்டிங். | 4. ஆ. சமஸ்கிருதம். |
| 5. ஆ. மகாவம்சம். | 5. அ. துய்ப்ளே. |
| 6. ஆ. பிம்பிசாரர். | 6. ஈ. வில்லியம் பெண்டிங். |
| 7. ஈ. இரண்டாம் தேவராயர். | 7. ஆ. பெருநற்கிள்ளி. |
| 8. அ. ii,i,iv,iii. | 8. ஆ. பிம்பிசாரர். |
| 9. ஈ. இராமபாலர் இராமசரிதத்தை இயற்றினார். | 9. ஆ. மகாவம்சம். |
| 10. ஈ. கிரேக்க. | 10. ஈ. கோவா. |
| 11. இ. பட்டாடக்கல். | 11. ஈ. பாரசீகம். |
| 12. ஆ. கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும். | 12. இ. பட்டாடக்கல். |
| 13. ஆ. W.C. ஜாக்சன். | 13. ஈ. விக்கிரமசீலா. |
| 14. ஈ. சமுத்திரகுப்தர். | 14. ஆ. க்யூனிபார்ம் |
| 15. ஆ. க்யூனிபார்ம் | 15. ஆ. கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும். |
| 16. அ. துய்ப்ளே. | 16. ஈ. கிரேக்க. |
| 17. ஆ. சமஸ்கிருதம். | 17. ஆ. W.C. ஜாக்சன். |
| 18. ஈ. விக்கிரமசீலா. | 18. அ. ii,i,iv,iii. |
| 19. ஈ. முதலாம் இராஜேந்திரன். | 19. ஈ. சமுத்திரகுப்தர். |
| 20. ஈ. கோவா. | 20. அ. புதிய தலைப்பாகை. |

II. ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 30 க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 7 X 2 = 14

21. பழங் கற்காலம் எவ்வாறு பிரிக்கப்படுகிறது?
- கீழ்ப்பழங்கற்காலம்.
- இடைப்பழங்கற்காலம்.
- மேல் பழங்கற்காலம்.

22. வேதகால இலக்கியங்களை வரிசைப்படுத்தவும். ( 2 குறிப்புகள் )
- ரிக்வேதம்,
- யஜூர் வேதம்.
- சாம வேதம்,
- அதர்வ வேதம்.

23. ஜனபதங்களுக்கும் மகாஜனபதங்களுக்கும் இடையேயான வேறுபாட்டைக் கூறுக. ( 2 குறிப்புகள் )

ஜனபதம் :
- ஜனபதம் என்ற சொல்லுக்கு "இனக்குழு தன் காலைப் பதித்தஇடம்" என்று பொருள்.
- ஜனபதங்கள் வளங்களுக்காகவும், அரசியல் மேலாதிக்கத்திற்காகவும் ஒன்றோடொன்று சண்டையிட்டுக் கொண்டன.

மா.வெங்கடேசன், M.A., M.PHIL., B.ED., முதுகலை ஆசிரியர் ( வரலாறு )
அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, அயப்பாக்கம், சென்னை - 77.

மகாஜனபதங்கள் :

- சிலஜனபதங்கள் மற்ற ஜனபதங்களை கைப்பற்றி மகாஜனபதங்களாக வளர்ச்சி பெற்றன.
- மகாஜனபதங்கள் மக்களை (ஜனங்களை) ஆண்ட பிரதேச முடியரசுகள் உருவானதைப் பிரதிபலித்தன.

24. பிம்பிசாரர் எவ்வாறு மகதப் பேரரசை விரிவுபடுத்தினார்? ( 2 குறிப்புகள் )

- திருமண உறவுகள் மற்றும், போர்கள் மூலம் எல்லைகளை விரிவுபடுத்தினார்.
- அவந்தி அரசரோடு நட்புறவைப் பேணினார்.
- அங்கத்தை ராணுவ பலத்தால் இணைத்துக் கொண்டார்.

25. பின்வருவன குறித்து ஒரு பட்டியலைத் தயாரிக்கவும்.

அ) இந்தியாவிலிருந்து ரோமுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்கள் :

- மிளகு, முத்துக்கள், தந்தம், பட்டுத்துணி, தாளிசபத்திரி, நீலக்கல், கோமேதகம், ஆமைஓடு, வைரம்.

ஆ) ரோமிலிருந்து இந்தியாவுக்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள்

- நாணயங்கள், புஷ்பராகக்கல், அஞ்சனம், பவளம், தாமிரம், தகரம், ஈயம், மது வகைகள்.

26. ஹுணர் குறித்து நீங்கள் அறிவது என்ன? ( 2 குறிப்புகள் )

- காஸ்பியன் கடல் அருகில் வாழ்ந்த பழங்குடி இன குழுக்கள்.
- ரோமபுரி பேரரசின் வீழ்ச்சிக்கு காரணமாக இருந்தவர்கள்.
- குப்தப் பேரரசின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தனர்.

27. பால வம்ச ஆட்சியின் போது நாளந்தா பல்கலைக்கழகத்தின் முக்கியத்துவத்தை விவரி. ( 2 குறிப்புகள் )

- பௌத்த மதக் கொள்கையை போதிக்கும் முக்கிய மையமாக விளங்கியது.
- இந்தியாவின் கிழக்குப் பகுதியில் பௌத்த மதம் புகழ் பெற உதவியது.
- பௌத்த, சமண, சம்ஸ்கிருத இலக்கியங்களின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியது.

28. சாளுக்கியர் காலத்தில் கன்னடத்தில் எழுதப்பட்ட இரண்டு முக்கியமான இலக்கியங்களைக் குறிப்பிடுக. ( 2 குறிப்புகள் )

- கவிராஜமார்கம்.
- பம்ப- பாரதம்.
- விக்கிரமார்ஜுன விஜயம்.

29. துருக்கியப் படையெடுப்பின்போது வட இந்தியாவில் ஆட்சியிலிருந்த ராஜபுத்திர வம்சாவளிகள் யாவர்? ( 2 குறிப்புகள் )

- டோமரர்கள், சௌகான்கள்.
- சோலங்கிகள், பரமரர்கள்.
- கடவாலா, சந்தேலர்கள்

30. அர்த்தசாஸ்திரம் குறிப்பு வரைக. ( 2 குறிப்புகள் )

- அர்த்தசாஸ்திரத்தை இயற்றியவர் சாணக்யர் என்ற கௌடில்யர் ஆவார்.
- இது அரசியல் மற்றும் நல்ல நிர்வாகம் பற்றிய வழிகாட்டும் நூலாகும்.
- மௌரியப் பேரரசு பற்றி அறிந்துக்கொள்ள இந்நூல் உதவுகிறது.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

மா.வெங்கடேசன், M.A., M.PHIL., B.ED., முதுகலை ஆசிரியர் ( வரலாறு )
அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, அயப்பாக்கம், சென்னை - 77.

III. ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 30 க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 7 X 3 = 21

31. ஹரப்பா மக்களின்' நம்பிக்கைகள்' குறித்து நீங்கள் அறிந்தது என்ன? (3 குறிப்புகள் )
- ❖ சிந்து மக்கள் இயற்கையை வழிபட்டார்கள்.
- ❖ அரச மரங்களை வழிபட்டனர்.
- ❖ தாய்த் தெய்வத்தை வழிபட்டனர்.
- ❖ ஹரப்பா மக்கள் இறந்தோரைப் புதைத்தனர்.

32. தென் இந்தியாவின் செம்புக்காலப் பண்பாடுகளைச் சுருக்கமாக விவரிக்கவும். (3 குறிப்புகள் )
- ❖ ஒரு முழுமை பெற்ற செம்புக்காலப் பண்பாடு தென்னிந்தியாவில் நிலவியதற்கான சான்றுகள் இல்லை.
- ❖ கல்லினாலான கருவிகள் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.
- ❖ கருப்பு மற்றும் சிவப்பு மட்பாண்டங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
- ❖ வேளாண்மையும், கால்நடை வளர்ப்பும் இக்கால மக்களின் வாழ்வாதாரமாக இருந்துள்ளன.

33. கங்கைச் சமவெளியில் நிகழ்ந்த நகரங்களின் தோற்றத்துக்கான காரணங்கள் யாவை? (3 குறிப்புகள் )
- ❖ வேளாண்உபரி.
- ❖ கைத்தொழில்.
- ❖ வணிகவளர்ச்சி.
- ❖ மக்கள்தொகை பெருக்கம்.

34. குப்தர் காலத்தில் அறிவியல் வளர்ச்சி குறித்து விவரிக்கவும். (3 குறிப்புகள் )
- ❖ சுழியம் ( பூஜ்ஜியம் ) என்ற கருத்தாக்கம் குப்தர்கள் காலத்தில்தான் கண்டுபிடிக்கப்பட்டது.
- ❖ பூமி ஒரு அச்சில் தன்னைத்தானே சுற்றுகிறது என்பதை ஆரியபட்டர் கூறினார்.
- ❖ வராகமிகிரரின் பிருஹத்சம்ஹிதா என்ற நூல் வானவியல், புவியியல், தாவரவியல், இயற்கை வரலாறு ஆகியவற்றிற்கான கலைக் களஞ்சியமாகும்.
- ❖ பிரம்மகுப்தர் கணிதம் மற்றும் வானவியலுக்கான முக்கிய நூல்களை எழுதியுள்ளார்.

35. இரண்டாம் அலெக்சாண்டர் என்று அழைக்கப்பட்டவர் யார்? ஏன்? (3 குறிப்புகள் )
- ❖ அலாவுதீன் ஹசன் பாமன்ஷா இரண்டாம் அலெக்சாண்டர் என்று அழைக்கப்பட்டார்.
- ❖ 11 ஆண்டுகள் பாமன்ஷா தன் அரசியல் எதிரிகளை அடக்கி சிறப்பாக ஆட்சி செய்தார்.
- ❖ வாரங்கல் மற்றும் ரெட்டி அரசுகளான ராஜமுந்திரி, கொண்டவீடு போன்ற அரசுகளை வென்றார்.
- ❖ தன்னுடைய வெற்றிகளை நினைவு கூறும் வகையில் தன் நாணயங்களில் தன்னுடைய பெயரை இரண்டாம் அலெக்சாண்டர் என்று பொறித்துக்கொண்டார்.

36. சூர்தாஸ், துக்காராம் ஆகியோரின் போதனைகளை ஆய்க.

<u>சூர்தாஸ் :</u>
- ❖ அன்பென்ற மதத்தையும் தனிப்பட்ட கடவுளிடம் பக்தியோடு இருத்தலையும் போதித்தார்.
- ❖ இவரது கவிதைகளில் கிருஷ்ணருடைய பாலலீலா முக்கிய கருப்பொருள் ஆகும்.

<u>துக்காராம் :</u>
- ❖ சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய செய்திகளை பரப்பினார்.
- ❖ கடவுள் பற்று, மன்னிக்கும் மனப்பாங்கு, மன அமைதி ஆகியவற்றை போதித்தார்.

37. அக்பரது மன்சப்தாரி முறை. (3 குறிப்புகள் )
- ❖ பிரபுக்கள், குடிமைப் பணி, இராணுவ நிர்வாக அதிகாரிகள் ஒன்றுபடுத்தப்பட்டு மன்சப்தார் என்ற பட்டம் வழங்கப்பட்டது.
- ❖ மன்சப்தார் தகுதி ஜாட், சவார் என இருவகைப்பட்டது.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

மா.வெங்கடேசன், M.A., M.PHIL., B.ED., முதுகலை ஆசிரியர் ( வரலாறு )
அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, அயப்பாக்கம், சென்னை - 77.

- ஜாட் என்பது ஒவ்வொரு மன்சப்தாரும் பெறும் ராணுவ வீரர்களின் எண்ணிக்கையை நிர்ணயம் செய்வதாகும்.
- சவார் என்பது மன்சப்தாரின் கீழிருக்கும் குதிரைகளின் எண்ணிக்கையைக் குறிக்கும்.

38. தரங்கம்பாடி (3 குறிப்புகள் )
- டேனியர்கள் தஞ்சாவூர் அரசரிடம் அனுமதி பெற்று தரங்கம்பாடியில் கோட்டை கட்டிக்கொள்ளும் உரிமையை பெற்றனர்.
- தரங்கம்பாடியில் டேனியர் கட்டிய கோட்டை இன்றும் சீர்கெடாமல் உள்ளது.
- டென்மார்க்கிற்கும் தரங்கம்பாடிக்கும் இடையே வாணிபம் நடைப்பெற்றது.
- சீகன்பால்கு தரங்கம்பாடியில் சமயப் பிரச்சாரம் செய்தார்.

39. அகமதியா இயக்கம் (3 குறிப்புகள் )
- அகமதியா இயக்கத்தை உருவாக்கியவர் மிர்சா குலாம் அகமது ஆவார்.
- குரானில் சொல்லப்பட்டுள்ள உண்மையான கொள்கைகளுக்கு திரும்ப வேண்டுமென்றார்.
- சமூக நெறிமுறைகளில் இவ்வியக்கம் பழமைவாத கண்ணோட்டத்துடன் செயல்பட்டது.
- ஆரிய சமாஜத்திற்கும், கிறித்துவ சமய போதகர்களுக்கு எதிரான விவாதங்களை மேற்கொண்டது.

40. குருநானக் பற்றி எழுதுக. (3 குறிப்புகள் )
- சீக்கிய மதத்தை தோற்றுவித்தவர் ஆவார்.
- சீக்கிய மதம் ஒரு கடவுள் கோட்பாட்டை முன்னெடுத்தது.
- உருவ வழிபாட்டையும் மதச் சடங்குகளையும் கண்டனம் செய்தது.
- சீக்கிய மதப் போதனைகள் வலிமை வாய்ந்த சமூக உணர்வை ஏற்படுத்தின.

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் 7 x 5 = 35

41. அ. சிந்து நாகரிகம் ஏன் ஹரப்பா நாகரிகம் என அழைக்கப்படுகிறது?
- இந்நாகரிகம் அடையாளம் காணப்பட்ட முதல் இடம் ஹரப்பா என்பதால், இது ஹரப்பா நாகரிகம் என்றும் அழைக்கப்படுகிறது.
- இந்தியாவில் முதற்கட்ட நகரமயமாக்கத்தின் சின்னம் சிந்து நாகரிகமாகும்.
- சிந்து நாகரிகமும் அதன் சமகாலப் பண்பாடுகளும் இந்தியாவிலும் பாகிஸ்தானிலுமாக மொத்தம் 1.5 மில்லியன் சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளன.
- லாகூரிலிருந்து முல்தானுக்கு ரயில் பாதை அமைப்பதற்காக ஹரப்பா அழிக்கப்பட்டது.
- இப்பகுதியிலிருந்து ஒரு முத்திரையை இந்தியத் தொல்லியல் துறையின் முதல் அளவையரான அலெக்ஸாண்டர் கன்னிங்ஹாம் கண்டெடுத்தார்.
- ஹரப்பாவின் முக்கியத்துவத்தையும் அதன் நாகரிகத்தையும் உணர்ந்து, அங்கு ஆய்வு நடத்தக் காரணமாக இருந்தவர் சர் ஜான் மார்ஷல் ஆவார்.
- ஹரப்பா நாகரிகத்தின் தொடக்க நிலையில் அப்பகுதி முழுவதும் கிராமங்களும் ஊர்களும் வளர்ச்சி பெற்றன.
- முதிர்ந்த ஹரப்பா பண்பாட்டுக் கட்டத்தில் நகரமையங்கள் தோன்றின.

41. ஆ. வேதகால அரசியல் மற்றும் நிர்வாகம் குறித்து ஒரு கட்டுரை எழுதுக.
- ரிக்வேதகால அரசுமுறை என்பது இனக்குழு சமூகத்தின் அரசியலே ஆகும்.
- அரசருடைய மிக முக்கியப் பணி இனக்குழுவைக் காப்பதாகும்.
- நிலப் பரப்பின் மீதும் மக்களின் மீதும் அவருக்கு அதிகாரமிருந்தது.
- அரசர்கள் தங்களுடைய செயல்பாடுகளுக்கு சமிதி, சபா ஆகிய அமைப்புகளின் ஆதரவை நாடினர்.
- இராணுவம் மற்றும் மதம் சார்ந்த பணிகளை விதாதா மேற்கொண்டன.
- மதகுருமார்கள் அரசருக்கு அறிவுரை வழங்கினர்.

Padasalai.Net

மா.வெங்கடேசன், M.A., M.PHIL., B.ED., முதுகலை ஆசிரியர் ( வரலாறு )
அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, அயப்பாக்கம், சென்னை - 77.

- சேனானி என்பவர் படைத் தலைவராவார்.
- படைக்குழுக்களுக்கும், கிராமங்களுக்கும் தலைவர் கிராமணியே ஆவார்.

42. அ. ஆசீவகம் குறித்து விளக்கவும். மேலும் இந்தியாவில் அதன் பரவலையும் குறிப்பிடவும்.

- பௌத்த ஆவணங்களின்படி, ஆசீவகம் என்ற பிரிவைத் தோற்றுவித்தவர் என்று கருதப்படுகிறது.
- ஆசீவகப் பிரிவின் தலைமையகமாக சிராவஸ்தி இருந்தது.
- ஆசீவகர்கள் நிர்வாணத் துறவிகள் ஆவர்.
- ஆசீவகர்கள் ஊழ்வினைக் கோட்பாட்டை நம்பியவர்கள் ஆவர்.
- ஆசீவகர்களின் அடிப்படைக் கொள்கை எல்லாமே விதி என்பதாகும்.
- ஆசீவகத்தின்படி, வாழ்வில் தவிர்க்க முடியாத ஆறு அம்சங்கள் இருக்கின்றன.
- அவை லாபம், நஷ்டம், இன்பம், துன்பம், வாழ்வு, மரணம் ஆகியன ஆகும்.
- குயவர்கள், வங்கியாளர்கள் போன்ற செல்வமிக்க துறவறம் பூணாத சீடர்கள் ஆசீவகத்திற்கு இருந்தார்கள்.
- ஆசீவகத்தின் செல்வாக்கு குறைவுதான் என்றாலும், நாடு முழுவதும் பரவியிருந்தது.

42. ஆ. இந்தியாவின் மீது பாரசீகர்களின் தாக்கம் குறித்து நாம் அறிவது என்ன?

- இந்தியாவின் வடமேற்குப் பகுதி பாரசீக மற்றும் இந்தியப் பண்பாடுகளின் சங்கமமாக மாறியது.
- இந்தியாவின் கலை, கட்டிடக்கலை, பொருளாதாரம், நிர்வாகம் ஆகியவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தியது.
- இந்தப் பண்பாட்டுத் தாக்கம் காந்தாரப் பகுதியில் அதிகமாக இருந்தது.
- இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் கரோஷ்டி எழுத்து முறை வளர்ச்சி பெற்றது.
- கரோஷ்டி எழுத்து முறை வலதுபுறமிருந்து இடதுபுறமாக எழுதப்படும் எழுத்து முறையாகும்.
- நாணயத்திற்கான இந்தியச் சொல்லான "கார்சா" பாரசீக மொழியிலிருந்து வந்ததாகும்.
- நாணயங்களின் புழக்கம், இந்தியா- பாரசீகத்திற்கு இடையில் வணிகத் தொடர்பு இருந்ததை உணர்த்துகிறது.
- மௌரியக் கலைகளும் கட்டிடக் கலைகளும் பாரசீகத் தாக்கத்துக்கான அடையாளங்களைக் கொண்டுள்ளன.
- மௌரியத் தூண்கள் ஆக்கிமீனைட்பேரரசில் காணப்படும் தூண்களை ஒத்துள்ளன.

43. அ. சங்ககாலம், சங்ககாலத்தைத் தொடர்ந்து உடனடியாக வந்தகாலத்தைச் சேர்ந்த வணிகர்கள் மற்றும் தொலைதூர வணிகம் பற்றி விளக்குக.

- தொலைதூர நாடுகளைச் சேர்ந்த வணிகர்கள் தமிழகத்தில் தங்கியிருந்து வணிகத்தில் ஈடுபட்டுள்ளனர்.
- பிற பகுதி கைவினைஞர்கள், தமிழகக் கைவினைஞர்களோடு இணைந்து பணியாற்றினர்.
- தமிழ்-பிராமி கல்வெட்டுகளில் வணிகத்தோடு தொடர்புடைய வணிகன், சாத்தன், நிகம போன்ற சொற்கள் இடம் பெற்றுள்ளன.
- உப்பு வணிகர்கள் உமணர் என்றழைக்கப்பட்டனர்.
- சாத்து என்னும் சொல் இடம் விட்டு இடம் சென்று வணிகம் செய்பவர்களைக் குறிப்பதாகும்.
- வணிகத்தில் நாணயங்கள் பயன்படுத்தப்பட்டாலும் பண்டமாற்று முறையே அதிகமாக நடைபெற்றது.
- ரோம தங்க வெள்ளி நாணயங்களும் பரிமாற்றத்திற்காகப் பயன்படுத்தப்பட்டன.
- ரோமப் பேரரசு தென்கிழக்கு ஆசிய நாடுகள் போன்ற தொலைதூர நாடுகளோடு வணிகத் தொடர்புகள் இருந்தன.
- அம்போரா என்னும் ரோம நாட்டு ஜாடிகள், கண்ணாடிப் பொருள்கள், கடல் கடந்த வணிக நடவடிக்கைகளைச் சுட்டுகின்றன.

43. ஆ. மத்தியத் தரைக் கடல் உலகின் பெருஞ்சக்தியாக ரோமானிய அரசு மேலெழுந்த விதத்தை விவரி.

- பொ.ஆ.மு. கடைசி நூற்றாண்டின் முடிவில், மத்திய தரைக்கடல் உலகின் வல்லரசாக ரோம் மேலெழுந்தது.
- ரோமானியக் குடியரசு, பொ.ஆ.மு. 27 இல் பேரரசர் அகஸ்டஸின் கீழ் ஒரு பேரரசு ஆயிற்று.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

மா.வெங்கடேசன், M.A., M.PHIL., B.ED., முதுகலை ஆசிரியர் ( வரலாறு )
அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, அயப்பாக்கம், சென்னை - 77.

- ஐரோப்பாவிலும் வட ஆப்பிரிக்காவிலும் பெற்ற வெற்றிகள் மூலம் ரோம் செல்வச் செழிப்பு மிக்க நகரமாயிற்று.
- ரோமின் செல்வச் செழிப்பு, இந்தியாவைச் சேர்ந்த பல்வேறு பொருள்களின் தேவையை அதிகரித்தது.
- குறிப்பாக தமிழ் நாட்டின் நறுமணப் பொருள்கள் மற்றும் துணி வகைகளின், தேவையை அதிகரித்து வணிக விரிவாக்கத்தை ஏற்படுத்தியது.
- பொ.ஆ. முதல் நூற்றாண்டில், எகிப்தியக் கடலோடி ஹிப்பாலஸ் என்பவர் அரபிக்கடலில் வீசும் பருவக்காற்றுகளின் காலமுறை இயல்புகளைக் கண்டறிந்தார்.
- இதன் விளைவாக ரோமானியக் கப்பல்கள் இந்தியாவின் மேற்குக் கடற்கரைக்கு நேரடியாகப் பயணிக்கத் தொடங்கின.
- இறுதி விளைவாக இந்தியாவிற்கு வரும் கப்பல்களின் எண்ணிக்கை குறிப்பிடத் தகுந்த அளவுக்கு உயர்ந்தது.
- ஆண்டொன்றுக்கு இருபது கப்பல்கள் என்பதிலிருந்து ஏறக்குறைய அன்றாடம் ஒரு கப்பல் என்பதாக அதிகரித்தது.

44. அ. ஃபெரோஸ் துக்ளகின் ஆட்சியை மதிப்பிடுக.

- பிரபுக்களிடமும், மதத் தலைவர்களிடமும் சமரசக் கொள்கையை கடைபிடித்தார்.
- வருவாய் நிர்வாகத்தை சரி செய்து பல வரிகளை குறைத்தார்.
- அடிமைகளுக்கு தொழிற்பயிற்சி அளித்து அரசாங்க தொழிற்கூடத்தில் அவர்களை பணியமர்த்தினார்.
- இவரது ஆட்சிக் காலத்தில் இரண்டு மங்கோலிய படையெடுப்புகளும் முறியடிக்கப்பட்டன,
- இஸ்லாமியர் அல்லாதோர் மீது ஜிசியா வரியை விதித்தார்.
- பல கல்வி நிறுவனங்களையும், மசூதிகளையும் கட்டினார்.
- அரண்மனைகளையும் கோட்டைகளையும் கட்டினார்.
- சட்லெஜ் மற்றும் யமுனை நதிகளில் கால்வாய்களை வெட்டி நீர்பாசன வசதியை ஏற்படுத்தினர்.

44. ஆ. “வருவாய் நிர்வாகத்தில் ஷெர்ஷா அக்பரது முன்னோடி” - விளக்குக.

- நெகிழ்வுத் தன்மை கொண்ட வருவாய் முறையைப் பின்பற்றினார்.
- நிலங்கள் முறையாக அளவை செய்யப்பட்டு நிலங்களின் வளத்திற்கு ஏற்றவாறு வரி நிர்ணயம் செய்யப்பட்டது.
- சில பகுதிகளில் ஜாகீர்தாரி முறையும் ஜமீன்தாரி முறையும் தொடர்ந்து செயல்படுவதற்கு அனுமதிக்கப்பட்டன.
- வணிகத்தை ஊக்குவிப்பதற்காக வணிக வரிகளை எளிமைப்படுத்தினார்.
- நுழைவு வரி, விற்பனைவரி ஆகியவை மட்டுமே வசூலிக்கப்பட்டன.
- தங்க, வெள்ளி, செப்புக்காசுகளில் இடம் பெறும் உலோகங்களின் தர அளவு வரையறை செய்யப்பட்டது.
- வணிகர்களின் வசதிக்காக சாலை ஓரங்களில் சராய் என்ற தங்கும் சத்திரங்களை அமைத்தார்.
- அவருடைய நாணய முறையானது முகலாயர் காலம் முழுவதும் அப்படியே பின்பற்றப்பட்டது.
- ஆங்கிலேயர் காலத்து நாணய முறைக்கும் இவரது நானயமுறை அடித்தளமானது.

45. அ. முகமது கவானின் ஆட்சிமுறை மற்றும் ராணுவ நிர்வாகம் பற்றி விவரி.

- மூன்றாம் முகம்மதுவின் தலைசிறந்த பிரதம மந்திரியாக விளங்கிய கவான் பாமினி அரசின் வளர்ச்சிக்கு வழிவகுத்தார்.
- பாரசீக வேதியியல் வல்லுநர்களின் வழிகாட்டுதலின் அடிப்படையில் வெடிமருந்தைப் பயன்படுத்தினார்.
- மாகாண ஆளுநர்களின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தினார்.
- நிர்வகிக்க வசதியாக நாட்டை எட்டு மாகாணங்களாகப் பிரித்தார்.
- ஒவ்வொரு மாகாணத்திற்கும் தனித்தனியே ஆளுநர்கள் நியமிக்கப்பட்டனர்.
- ஆளுநர்களின் ராணுவ அதிகாரத்தை குறைத்தார்.
- அரசு அதிகாரிகளுக்கு ஊதியத்திற்குப் பதில் நிலங்கள் தரப்பட்டன.
- கவான் அறிமுகப்படுத்திய நிர்வாகச் சீர்திருத்தங்கள் அரசின் நிலையை உயர்த்தின.

Padasalai.Net

மா.வெங்கடேசன், M.A., M.PHIL., B.ED., முதுகலை ஆசிரியர் ( வரலாறு )
அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, அயப்பாக்கம், சென்னை - 77.

45. ஆ. தமிழ் நாட்டில் நடந்த சமூக சீர்திருத்த இயக்கங்களை எடுத்துக்காட்டுக

<u>வட இந்திய சீர்திருத்த இயக்கங்கள்</u> :

- வட இந்திய சீர்திருத்தஇயக்கங்கள் தமிழகத்தின்மீது தங்கள் தாக்கத்தை ஏற்படுத்தின.
- பிரம்மச மாஜமும் ஆரிய சமாஜமும் தமிழகத்தில் கிளைகளைப் பெற்றிருந்தன.
- கேசவ சந்திர சென் சென்னைக்கு வருகை தந்து உரையாற்றினார்.

<u>இராமலிங்க அடிகளார்</u> :

- இராமலிங்க அடிகளார் தனது பாடல்கள் மூலம் முற்போக்குச் சிந்தனைகளை பரப்பினார்.
- மத வெறியையும், பகுத்தறிவற்ற தன்மையையும் கண்டனம் செய்தார்.
- வடலூரில் சத்திய தரும சாலையை நிறுவி ஏழைகளுக்கு உணவளித்தார்.
- பஞ்சங்களும் கொள்ளை நோயும் ஏற்பட்டபோது சாதிமத வேறுபாடின்றி உணவளித்தார்.

<u>அயோத்திதாச பண்டிதர்.</u>

- ஆதிதிராவிடர்களே உண்மையான பௌத்தர்கள் என்றும் வாதிட்டார்.
- மக்கள் பௌத்த மதத்திற்கு மாறுவதை ஊக்குவித்தார்.
- இவரது கொள்கைகளை வட தமிழகத்தில் அதிகமானோர் பின்பற்றினர்.

46. அ. பொ.ஆ.மு. ஆறாம் நூற்றாண்டில் ஏற்பட்ட அறிவுமலர்ச்சிக்கான காரணங்கள் யாவை?

- அரசுருவாக்கமும், வேதமதத்தின் கடுமையும் சிந்தனை மற்றும் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தின.
- மதநம்பிக்கைகளுக்கு எதிரான கிளர்ச்சியாக அவைதீகக் கோட்பாடுகள் உருவாகின.
- பிரதேச அடையாளங்களின் தோற்றம் சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களை உந்தித் தள்ளியது
- மேட்டுக்குடி மக்கள் ஏற்கனவே நிலவிய சமூக அமைப்பை எதிர்த்து வைதீக மதங்களை நோக்கி சென்றனர்.
- வேத மதம் சமூகத்தின் அனைத்துப் பகுதியினரிடமும் ஊடுருவியிருக்கவில்லை.
- நகரமயமாக்கம், வணிக விரிவாக்கம் ஆகியன காரணமாக வணிகர்கள், சேத்கள் போன்ற புதிய வர்க்கம் உருவானது.
- இவர்கள் தமது பொருளாதாரத் தகுதி நிலைக்கு இணையான சமூகத் தகுதியைக் கோரினர்.
- ஆசிரமங்களாகப் பிரிக்கப்பட்ட வாழ்க்கைமுறை பிராமணர்களுக்கு மட்டுமே அனுமதிக்கப்பட்டிருந்தது.
- இவ்வுரிமை தங்களுக்கு அனுமதிக்கப்படவில்லை என்பது சத்திரியர்களின் மனக்குறையாக இருந்தது.

47. அ. பொ.ஆ. 1ஆம் நூற்றாண்டு தமிழ் அரசாட்சிகள் குறித்த விவரங்கள் தருக.

- தமிழ்ப் பகுதியின் அரசியல் நிலப்பரப்பு சிறு சிற்றரசுகளாகத் துண்டுபட்டிருந்தது.
- மதுரையைத் தங்களின் தலைநகராகக் கொண்டு பாண்டியர் ஆட்சி செய்தனர்.
- உறையூரைத் தங்களின் தலைநகராகக் கொண்டு சோழர் ஆட்சி செய்தனர்.
- வஞ்சியியைத் தங்களின் தலைநகராகக் கொண்டு சேரர் ஆட்சி செய்தனர்.
- பொ.ஆ.மு. 3 ஆம் நூற்றாண்டிலேயே மௌரிய அரசர்கள் தமிழ் மூவேந்தர்களை அறிந்திருந்தனர்.
- அசோகரின் 2 வது பாறைக் கல்வெட்டு மூவேந்தர்களை தனது பேரரசின் எல்லையிலிருந்த அரசுகள் என்று குறிப்பிடுகிறது.
- சிறிய பகுதிகளை ஆட்சி செய்த பல போர்ப் பிரபுக்களும் சிற்றரசர்களும் (வேளிர்) இருந்தனர்.
- தமிழ் இலக்கியங்களின் தொகுப்பிலிருந்து தமிழ்ப் பகுதி குறித்த விரிவான தகவல்களை பெறமுடிகிறது.

46. ஆ. கொடுக்கப்பட்ட இந்திய வரைபடத்தில் அசோகப் பேரரசில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும்.

1. கிர்னார் 2. கௌசாம்பி 3. ஏராகுடி 4. லும்பினி 5. ராம்பூர்வா

Padasalai.Net

மா.வெங்கடேசன், M.A., M.PHIL., B.ED., முதுகலை ஆசிரியர் ( வரலாறு )
அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, அயப்பாக்கம், சென்னை - 77.



மா.வெங்கடேசன், M.A., M.PHIL., B.ED., முதுகலை ஆசிரியர் ( வரலாறு )
அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, அயப்பாக்கம், சென்னை - 77.

47. ஆ. ஐரோப்பியரின் வருகை குறித்து ஏதேனும் ஐந்து முக்கிய நிகழ்வுகளை காலக்கோட்டில் வரைந்து காட்டுக

கர்நாடகப் போர்கள் 1740 - 1765




Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com

மா.வெங்கடேசன், M.A., M.PHIL., B.ED., முதுகலை ஆசிரியர் ( வரலாறு )
அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, அயப்பாக்கம், சென்னை - 77.




மேலும் ஆங்கிலேயர், போர்சுகீசியர், பிரெஞ்சுக்காரர்கள், டேனியர்கள், டச்சுக்காரர்கள் சம்பந்தப்பட்ட அனைத்தும் இதற்கு சரியான விடையே ஆகும்.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com